**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093630

1. District : மாவட்டம் திண்டுக்கல் PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 01 Date: நாள் 07.01.2021

2. (i) Act சட்டம்: PC ACT 1988 as Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: amended by PC (Amendment) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: ACT 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 02.12.2020, 04.01.2021 & 06.01.2021
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.01.2021 Time : நேரம் 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 11.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 கி.மீ தென்கிழக்கு.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட நகர் ஊரமைப்பு, திண்டுக்கல். 14, விவேகானந்தா நகர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V.N. நாராயணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நாச்சிமுத்து
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 65/2021 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் மற்றும் சிவில் பில்டர் (g) Address : முகவரி 7, வைரம் நகர், காளியப்பனூர், தாந்தோணி அஞ்சல், கரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. அ. முத்துகிருஷ்ணன், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், எண். 14, விவேகானந்தா நகர், திண்டுக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 7-1-2021

Signature of the Officer in-charge, Police Station [signature] DSP/DGI 7/1/21.
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.01.2021, 13.45 hrs.

Name: பெயர் J. நாகராஜன்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர்

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:1/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

## Column No.12, FIR Contents

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 07.01.2021-ம் தேதி காலை 08.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது கரூர் மாவட்டம், கலெக்டர் ஆபிஸ் அஞ்சல், காளியப்பனூர், எண்:7, லெட்சுமி நகரை சேர்ந்த நாச்சிமுத்து மகன் V.N.நாட்ராயன், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை நான் பெற்று கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்கிறேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: V.N.நாட்ராயன், வயது.65/2021, த/பெ.நாச்சிமுத்து, 7, லெட்சுமி நகர், காளியப்பனூர், கலெக்டர் ஆபிஸ் அஞ்சல், கரூர் பெறுநர்: உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல். நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். எனக்கு மனைவி மற்றும் ஒரு மகன் உள்ளனர். நான் S.S.L.C., வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சென்ற 2009-10 வருடங்களில் திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தாலுகா பெரும்புள்ளி கிராமத்தில் சர்வே எண்கள்: 96/2 முதல் 127/1B வரை இடையே சில எண்களை தவிர்த்து உள்ள நிலங்கள் மொத்தம் சுமார் 40 ஏக்கரை சிறுகசிறுக பல கிரையங்களாக விலைக்கு வாங்கினேன். அதில் செல்வம் நகர் A, B, C என மூன்று பிளாக்களும் மற்றும் செல்லம் நகர் என்ற பெயரில் ஒரு பிளாக்கும் ஆக நான்கு பிளாக்குகளாக பிரித்து பிளாட்கள் போடப்பட்டது. அதில் ஒவ்வொரு பிளாட்டுக்கும் தலா 1200 சதுர அடி வீதம் இருக்கும்படி வீட்டுமனை இடங்கள் மற்றும் அரசு விதிமுறைப்படி பாதை, பொது இடங்கள் உருவாக்கப்பட்டது. அதன்பிறகு நான்கு பிளாக்களுக்கும் வீட்டுமனை தொழில் நுட்ப அனுமதிக்காக 3.11.2018ம் தேதியில் இணையதளம் மூலம் துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களுக்கு வரைமுறை கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தேன். அதன்படி செல்லம் நகர் பிளாக்கிற்கு 23.12.2019ம் தேதியும் மற்றும் செல்வம் நகர் A பிளாக்கிற்கு 28.02.2020ம் தேதியும் அனுமதி உத்தரவு கிடைத்து விற்பனை நடைபெறுகிறது. அதன்பிறகு செல்வம் நகர் B மற்றும் C

பிளாக்கில் உள்ள மொத்தம் 378 வீட்டுமனைகளுக்கான விண்ணப்பங்கள் முறையே கோப்பு எண்:10794/2018/ம.மா மற்றும் 10788/2018/ம.மா ஆக அனுமதி வேண்டி துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களிடம் நிலுவையில் இருந்தது. அதன்பிறகு சென்ற ஜூலை-2020ல் நிர்வாக காரணங்களுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திறக்கப்பட்டது. அதன்பொருட்டு மேற்படி எனது B மற்றும் C பிளாக் விண்ணப்ப கோப்புகள் மதுரையிலிருந்து திண்டுக்கல் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டு அங்கு நடப்பு எண்கள் முறையே 847/2020/தி.மா, 980/2020/தி.மா கொடுத்து நிலுவையில் இருந்தது. இதில் B பிளாக் பைல் எண்: 1489/2020 என மாற்றப்பட்டது. இதில் B பிளாக் 1 லட்சம் சதுர அடிக்கு மேல் உள்ளதால் அதில் இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், சென்னை அவர்கள் அனுமதிக்கு அனுப்பவேண்டியும், C பிளாக் 1 லட்சம் சதுர அடிக்கு குறைவாக இருப்பதால் மாவட்ட உதவி இயக்குநர் அனுமதிக்காகவும் இருந்தது. அதன்படி எனது வீட்டுமனை அனுமதி விண்ணப்பம் சம்மந்தமாக சென்ற ஆகஸ்ட்-2020ல் ஒருநாள் காலை சுமார் 11.30 மணிக்கு திண்டுக்கல் விவேகானந்தர் நகரில் உள்ள உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலம் சென்று உதவி இயக்குநர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்களை பார்த்து கேட்டேன். அப்போது உதவி இயக்குநர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்கள் எனது விண்ணப்ப கோப்பை எடுத்து பார்வையிட்டு அதில் B பிளாக் சம்மந்தமாக சில ஆவணங்கள் இணைக்கப்படவேண்டும். அது பற்றிய விபரம் உங்களுக்கு கடிதமாக தெரிவிக்கப்படும் என்று சொன்னார். அதன்படி அனுப்பப்பட்ட உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் இணைக்கப்பட வேண்டிய கூடுதல் ஆவணங்கள் பற்றி தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த கடிதம் தேதி ஞாபகம் இல்லை. நானும் அந்த ஆவணங்களை தயார் செய்து எனது கடிதம் நாள்:24.08.2020 உடன் இணைத்து உதவி இயக்குநர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்களை பார்த்து கொடுத்தேன். அவரும் அதை வாங்கி விண்ணப்பத்துடன் வைத்துக்கொண்டு பிறகு கூப்பிடுகிறேன் என்று சொன்னார். சரி என்று நானும் வந்துவிட்டேன். அதன்பிறகு 15.09.2020ம் தேதியிட்ட உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலர் அவர்களின் கடிதம் எனக்கு கிடைத்தது. அதில் B பிளாக் சம்மந்தமாக மீண்டும் 7 கூடுதல் விபரங்கள்

தேவைப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி அதில் குறிப்பிட்டிருந்த ஆவணங்களை தயார் செய்து 01.10.2020ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு உதவி இயக்குநர் அலுவலகத்தில் சம்மந்தப்பட்ட அலுவலர் வசம் கொடுத்தேன். அதன்பிறகு உதவி இயக்குநர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்களை பார்த்து சொன்னேன். அவரும் சரி இடத்தை பார்க்கிறேன் என்று சொன்னார். அதன்பிறகு அவரும் சிலநாட்களில் எனது இடத்திற்கு வந்து பார்வையிட்டு சென்றார். அதேபோல் C பிளாக் சம்மந்தமாக 21.10.2020ம் தேதி ஒரு கடிதம் அனுப்பி இருந்தார்கள். அதில் கேட்கப்பட்டிருந்த ஆவணங்களையும், உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைத்தேன். அதன்பிறகு தொடர்ந்து தாமதமாகவே கடந்த 02.12.2020ம் தேதி மாலை சுமார் 5.00 மணிக்கு உதவி இயக்குநர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்களை அவரது அலுவலகத்தில் பார்த்து கொடுத்தேன். அவரும் அதை பெற்றுக்கொண்டு எல்லாம் சரியாக இருக்கிறது, உங்களது பிளாட்களுக்கு அனுமதி தர பிளாக் ஒன்றுக்கு ரூ.1,00.000/- வீதம் இரண்டு பிளாக்குகளுக்கு ரூ.2,00,000/- கொடுத்தால் உங்களது கோப்பின் மீது உடனடி நடவடிக்கை எடுத்து அனுமதி கொடுப்பதையும், மேல் அனுமதிக்காக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பவேண்டியதை அனுப்பி அனுமதி கிடைக்க விரைந்து ஏற்பாடு செய்வேன். இல்லாவிட்டால் நீங்கள் அலைந்து கொண்டிருக்க வேண்டியதுதான் என்று சொன்னார். அதற்கு நான், சார் முறையாக பிளாட்கள் பிரிக்கப்பட்டு பாதை மற்றும் பொது இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆவணங்கள் அனைத்தையும் சரி செய்து கொடுத்துவிட்டேன். எந்த குறையும் இல்லை. நானும் பொருளாதார நிலையில் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன். எல்லாம் சரியாக இருந்தாலும் இரண்டு பிளாக்களுக்கும் வீட்டுமனை அனுமதி வேண்டுமானால் நான் கேட்ட தொகை ரூ.2,00,000/- கொடுத்தால் தான் சென்னைக்கு அனுப்பி அனுமதி கிடைக்கும். இல்லாவிட்டால் உங்களது கோப்பு எங்களது அலுவலகத்தை விட்டு நகராது என்று கறாராக சொன்னார். நானும் என்ன செய்வதென்று தெரியாமல் சரிங்க சார் என்று சொல்லி விட்டு வந்து விட்டேன். இதற்கிடையே இரண்டு முறை சென்ற போது உதவி இயக்குநர் அலுவலகத்தில் இல்லை. அதன்பிறகு 04.01.2021ம் தேதி மதியம் சுமார் 01.30 மணிக்கு திண்டுக்கல் சென்று உதவி இயக்குநர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்களை அவரது அலுவலகத்தில்

பார்த்து என்னால் புரட்ட முடியவில்லை என்று எனது கஷ்டத்தை மீண்டும் சொல்லி விண்ணப்பங்களை அனுமதிக்கும்படி கேட்டேன். அதற்கு அவர் பேசுவதற்கு ஒன்றுமில்லை, செலவுகள் நிறைய உள்ளது என்று சொல்லி ரூ.50,000/-ஐ குறைத்து ரூ.1,50,000/-ஐ நீங்கள் கொண்டு வந்து கொடுத்தால் மட்டுமே உங்களது பைலை நான் சரிபார்த்து சென்னைக்கு அனுப்பவேண்டியதை அனுப்பி அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்யமுடியும் என்று கறாராக சொல்லிவிட்டார். நானும் வேறு வழியில்லாததால் சரிங்க சார் என்று சொல்லி வந்துவிட்டேன். அதன்பிறகு 06.01.2021ம் தேதி மதியம் சுமார் 1.00 மணிக்கு உதவி இயக்குநர் அலுவலகம் சென்று உதவி இயக்குநர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்களை பார்த்து எனது கஷ்டத்தை சொல்லி கேட்டேன். அதற்கு அவர் விபரம் புரியாமல் பேசுகிறீர்கள் என்று சொல்லி ஏற்கனவே கேட்ட பணத்தில் ரூ.50,000/-குறைத்து ரூ.1,00,000/-ஐ நாளை கொண்டு வந்து கொடுங்கள், இதற்கு மேல் குறைக்க முடியாது என்று சொல்லி, உங்கள் விண்ணப்பத்தில் நான் செய்யவேண்டிய வேலைகளை செய்து விடுகிறேன். நாளை 07.01.2021ம் தேதி பணத்தை ஏற்பாடு செய்து வரும்போது எனக்கு போன் செய்யுங்கள், எங்கே வருவது என்று சொல்கிறேன் என்று சொன்னார். பின்னர் சரி என்று வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் நேற்று 06.01.2021 வீட்டில் நான் இருந்தபோது இரவு சுமார் 08.15 மணிக்கு உதவி இயக்குநர் திரு.முத்துகிருஷ்ணன்அவர்கள் அவரது கைபேசி எண்: 9843061813 மூலம் எனது கைபேசி எண்:9600911178க்கு அழைத்து தற்போது பணத்தை கொண்டு வரமுடியுமா என்று கேட்டார். நான் புரட்டிக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் புரட்டிகொண்டு நாளை 07.01.2021ம் தேதி மதியம் வாக்கில் எனது கைபேசிக்கு பேசிவிட்டு கொண்டு வாருங்கள் என்று சொன்னார். நானும் யோசித்துப்பார்த்ததில் மேற்படி திண்டுக்கல் மாவட்டம் பெரும்புள்ளி கிராமத்தில் நான் போட்டுள்ள செல்வம் நகர் B மற்றும் C பிளாக் வீட்டுமனை பிரிவுகளுக்கு அரசு அனுமதி பெற ஏற்பாடு செய்ய உதவி இயக்குநர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.1,00,000/- கொடுத்து பெற என்மனம் விரும்பவில்லை. அதனால் மேற்படி வீட்டுமனைகள் அனுமதியை ஏற்பாடு செய்து பெற்று தர என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.1,00,000/- கேட்ட திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

திரு.முத்துகிருஷ்ணன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். இத்துடன் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு, திண்டுக்கல் அவர்களின் கடிதம், நாள் 15.09.2020 மற்றும் எனது கடிதங்கள் 24.08.2020 மற்றும் 01.10.2020ன் நகல்கள் ஆகியவற்றை இணைத்துள்ளேன். உதவி இயக்குநர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1,00,000/- கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் வைரஸ் நோய் தொற்று பரவல் சம்மந்தமாக கடைபிடிக்கவேண்டிய வழிமுறைகளை பின்பற்றி இந்த புகாரை கொடுக்கின்றேன். இப்படிக்கு, Sd/- xxxxx (V.N.நாட்ராயன் 07.01.2021)

Sir, Received the complaint on 07.01.2021 at 08.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources, complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.01/2021, u/s 7 of P.C Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018, on 07.01.2021 at 09.00 hrs and took up investigation.

Original FIR along with complaint of Tr.V.N.Natrayan, Age.65/2021, S/o.Natchimuthu,. 7, Lakshmi Nagar, Kaliyappanur, Collectorate (P.O), Karur and with the relevant documents is submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

7/1/21
(J.Nagarajan)
Dy.Supdt of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.